நாள்: 28.07.2026
OP.113/2023 J/T/W O.P.278/2023
பெயர் ரங்கநாதன்
ம.சா.1
<u>குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள மனு எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆகியவற்றை படித்து பார்த்து தான் இந்த முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். என் தகவலின் அடிப்படையில் தான் மனு, முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். இந்தோ தீபெத் படைப்பிரிவில் கான்ஸ்டபிளாக கிச்சன் சர்வீஸ்ல் வேலை பார்த்து வருகிறேன். அதிகாரிகளுக்கு சாப்பாடு கொடுப்பது எனது வேலையாகும். நான் சத்தீஸ்கரில் தற்சமயம் வேலை பார்த்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு முடித்துவிட்டு தனியாக எதுவும் கேட்டரிங் படிப்பு எதுவும் படிக்கவில்லை. நான் மாதம் 60 ஆயிரம் பெற்று வருகிறேன். என் சம்பளம் சம்மந்தமாக நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். என் சம்பள சான்றிதழை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கு 17.05.2019 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணம் சீப்பாலக்கோட்டை ரங்கநாதர் கோவிலில் வைத்து நடைபெற்றது. என் திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் தான். திருமணம் முடிந்த உடன் என் மனைவியை என் சொந்த ஊருக்கு அழைத்து சென்றேன். அங்கு வைத்து தான் எனக்கு சம்பிரதாயங்கள் நடைபெற்றது. திருமணம் முடிந்து என் பெற்றோர் மட்டும் தான் என்னுடன் இருந்தார்கள். என் அக்கா திருமணம் முடிந்து அவரது வீட்டில் இருந்தார். திருமணத்தை நான் பதிவு செய்யவில்லை. என் மனைவி பதிவு செய்துள்ளார். நான் ஓ.பி 113/2023 மனுவில் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ளேன். என் மனைவி ஓபி 278/2023 மனுவை என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்துள்ளார். என் மனு பத்தி 2ல் நான் என் மனைவிக்கு கணவர் என்ற முறையில் செய்ய வேண்டிய கடமைகளை நல்ல முறையில் செய்து வந்துள்ளேன் என்று சொல்லியிருக்கிறேன். நான் என் மனைவிக்கு அடிப்படை வசதிகளான மருத்துவம் மற்றும் உணவு உடைக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்யவில்லை என்றால் சரியல்ல செய்துள்ளேன். 11.11.2019 ல் என் மனைவி பிரிந்து சென்ற பின்னர் நான் அவருக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்யவில்லை அதற்கு முன்பு உதவி செய்தேன். ஆனால் அதற்கான ஆவணங்கள் கிடையாது. என் மனுவின் 7வது பத்தியில் 20.04.2022லிருந்து சேர்ந்து வாழ்வதாக சொல்லியுள்ளேன் என்றால் என் தந்தை இறந்த பின்னர் சேர்த்து வைத்தார்கள். ஆனால் 10 நாட்கள் மட்டுமே வாழ்ந்து விட்டு என் மனைவி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார். 10 நாளும் எனது ஊரான சீப்பாலக்கோட்டையில் வாழ்ந்தோம்.

01.06.2023ல் நான் விவாகரத்து கோரி என் மனைவிக்கு நோட்டீஸ் அனுப்பினேன். 27.06.2023ல் என் மனைவி சேர்ந்து வாழக்கோரி பதில் நோட்டிஸ் அனுப்பினார் என்றால் சரிதான். என் மகன் பெயர் ஜெயசூர்யா. 03.08.2020ல் என்

மகன் பிறந்தார். என் மகன் என்ன படிக்கிறார் என்று எனக்கு தெரியாது. எந்த பள்ளியில் படிக்கிறார் என்று தெரியாது. என் அம்மா 11.11.2019 ல் ஓடைபட்டி காவல்நிலையத்தில் என் மனைவி மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் லடாக்கில் இருந்து விமானம் மூலம் போடியில் உள்ள எனது மனைவி ஊருக்கு தலைதீபாவளி கொண்டாட சென்றேன். அப்போது என் மனைவி என்னுடன் தான் இருந்தார். போலீசார் என் தயார் கொடுத்த புகார் பொய்யான புகார் என வழக்கை முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு 2 பவுன் நகை போட்டார்கள் நான் 2 பவுன்ல் தாலி போட்டேன். என் மனைவிக்கு 20 பவுன் நகை போட்டார்களா என்பது எனக்கு தெரியாது. என் மனுவில் பத்தி 5 ல் பல்சர் இருச்சக்கர வாகனம் வாங்கியதாக சொல்லியுள்ளேன். வண்டியின் பதிவு எண் பார்த்து தான் சொல்ல வேண்டும். என் மனைவி எங்களுக்குள் நடந்த பழைய பிரச்சனைகளை மறந்து விட்டு எந்த நிபந்தனைகளும் இன்றி எனது மகனின் எதிர்காலத்திற்காக சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை.

11.11.2019 க்கு பின்னர் தான் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல அதற்கு முன்னர் தான் ஏற்பட்டது. 03.12.2019 ல் என் மனைவி உத்தமபாளையம் காவல்நிலையத்தில் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகார் மனு விசாரணைக்கு ஆஜரான நான் என் மனைவியை 5 மாதத்திற்குள் சேர்ந்து வாழ அழைத்து செல்வதாக ஒத்துக்கொண்டேன் என்றால் சரிதான். அதற்கு பின்னர் எனக்கு விபத்து ஏற்ப்பட்டதால் நான் அழைத்து செல்லவில்லை. 5 மாதத்திற்கு பின்னர் கொரோனா காலகட்டம் என்பதால் என்னால் அழைத்து செல்ல இயலவில்லை. கொரோனா காலத்திற்கு பின்னர் எதற்கு என் மனைவியை அழைத்து செல்லவில்லை என்றால் என் மனைவி என்னிடம் தகாத கெட்ட வார்த்தைகளை பேசி மனஉலைச்சல் ஏற்படுத்தியதால் அழைத்து செல்லவில்லை. மேற்படி சங்கதியை என் மனுவில், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். என் மனைவி தகாத வார்த்தைகளால் பேசிய சமயம் நான் லடாக்கில் இருந்தேன். என்னிடம் தான் செல்போனில் பேசினார். அது சம்மந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 15.02.2021 ல் தேனி மாவட்ட கண்காணிப்பாளரிடம் நான் ஒத்துக்கொண்டபடி என் மனைவியை அழைத்து செல்லலததால் சேர்ந்து வாழ வேண்டும் என என் மனைவி புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மனைவி என் மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் அதில் உத்தரவு பிறப்பித்த பின்னர் தான் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது எனக்கு தெரியும். அந்த வழக்கில் எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் நீதிமன்ற அழைப்பாணையை மறுக்கவில்லை. குடும்ப வன்முறை சட்ட மனுவை என் மனைவி வாட்ஸ்சாப் மூலம் எனக்கு அனுப்பினாரா என்றால் மனுவை அனுப்பவில்லை. என் பள்ளி தோழியின் பெயர் ராஜலட்சுமி. அவர் என்னுடன் 12 ம் வகுப்பு வரை தொடர்ந்து படித்தார். என் திருமணத்திற்கு பின்னர் திருவிழாவிற்கு ராஜேஸ்வரி வந்தார் என் மனைவி

அவருடன் பேசுவது எனக்கு பிடிக்கவில்லை என்றார் அதன் பின்னர் நான் பேசவில்லை. ராஜலட்சுமி முன்பு கேரளாவில் இருந்தார் தற்போது எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் தான் என் பள்ளி தோழி ராஜலட்சுமியும் அவரது குழந்தையும் என்றால் சரிதான். என்னுடைய முதுகில் ராஜலட்சுமியின் புகைப்படத்தை பச்சை குத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவர் படத்தை பச்சை குத்தியுள்ளேன் என்றும், அதை கண்டுபிடித்து என் மனைவி எரச்சக்கநாயக்கனூரில் கேட்டப்போது தான் நானும் என் சித்தி மகன் பிரசாத் மற்றும் சித்தியும் சேர்ந்து அடித்தோம் என்றால் சரியல்ல. 28.01.2022 ல் நான் அடித்தது சம்மந்தமாக எனது மனைவி சின்னமனூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் அது பொய் புகார். நான் காவல்நிலையத்தில் என் மனைவியுடன் சேர்ந்து வாழ்வதாக எழுதி கொடுத்து என் மனைவியை அழைத்து சென்றுவிட்டேன். புகாரை வாபஸ் பெற்று சேர்ந்து வாழ அழைத்து சென்றேன். 01.06.2022 என் மனைவியின் சகோதரி திருமணத்திற்கு போடி வந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என் மனைவியுடனும் குழந்தையுடனும் சந்தோசமாக எடுத்துக்கொண்ட புகைப்படம் என்றால் சரிதான். 05.03.2023 ல் ஆண்டிபட்டி வேலப்பர் கோவிலில் என் மகனுக்கு மொட்டை போட்டோம் என்றால் சரிதான். மொட்டை போட நான் தான் ஏற்பாடு செய்தேன் என்றால் சரிதான். மொட்டை போட்ட புகைப்படத்தில் உள்ள நானும் என் மனைவியும் என்றால் சரிதான். என் மகனுக்கு மொட்டை போடும் போது சந்தோசமாக தான் வாழ்தேன் என்றால் சரியல்ல. மசாஆ 6 வழக்கறிவிப்பில் ஊர்காரர்கள் சொல்லி தான் நான் மொட்டை போடுவதற்கு வேலப்பர் கோவிலுக்கு சென்றேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி மொட்டை போட வராததால் ஊர் காரர்கள் மூலமாக வரவழைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் என் மனைவி அணிந்திருக்கும் நகைகள் அவருடையது தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடன் இருக்கும் சிறுவன் மற்றும் சிறுமி என் பள்ளி தோழி ராஜலட்சுமி குழந்தைகள் என்றால் சரிதான். நான் சீப்பாலக்கோட்டையில் வைத்து மேற்படி புகைப்படங்களை எடுத்தேன். இரண்டு புகைப்படமும் ஒரே நாளில் எடுத்தப்புகைப்படம் என்றால் சரிதான். திருவிழா அன்று ராஜலட்சுமி குழந்தைகளை அழைத்து வந்தார் அப்போது புகைப்படங்களை எடுத்தேன்.

ராஜலட்சுமி உடன் நான் தொடர்பில் இருப்பதால் தான் என் மனைவியை புறக்கணித்து இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் மனைவி தாக்கல் செய்த இடைக்காலமனு எண்.1/2025 நான் என் வழக்கறிஞர் மூலம் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் அதில் உள்ளது என் கையொப்பம் தான். அதில் பத்தி 11ல் என் சம்பளம் ரூ.42,076/- என சொல்லி சம்பள சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தவறான தகவலை நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி பழைய பிரச்சனைகளை மறந்து என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை அவர் சினிமாவில் நடித்து ஆடம்பரமாக வாழ நினைக்கிறார் அவருடன் என்னால் சேர்ந்து வாழ இயலாது. அதனால் நான் விவாகரத்து

வேண்டி மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், விவாகரத்து மனுவை தள்ளுபடி செய்து என் மனைவி சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்